செய்தி வெளியீடு எண்: 262 நாள்: 16.04.2018

## செய்தி வெளியீடு

அரசுப்பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது போல் ஓய்வூதியர்களுக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டும் என்று ஓய்வூதியர்களும், பல்வேறு ஓய்வூதிய சங்கங்களும் அரசிடம் கோரிக்கைவைத்தன. அதனை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தததன் அடிப்படைல் தமிழக சட்டபேரவையில் 2016-17 க்கான நிதித்துறை மானியக் கோரிக்கையின் போது ”தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978-ன் கீழ் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் பயன்பெறும் வகையில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஓய்வூதியர் அடையாள அட்டை வழங்கப்படும்” என மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறை அமைச்சரால் அறிவிப்பு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அரசாணை எண்.87 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் :10.04.2017-ன் மூலம் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியர் அடையாள அட்டை வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.

ஓய்வூதியர் அடையாள அட்டைகளை தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் ( NIC) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் நடத்தப்படும் 659 இசேவைமையங்கள்/ பொது சேவைமையங்கள் வாயிலாக வழங்க தேவையான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக சுமார் **7,32,931** ஓய்வூதியர்கள் அடையாள அட்டை பெற்று பயன் பெறுவர்.

மேலும் கூட்டுறவு தணிக்கைத்துறை மற்றும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை ஆகிய துறைகளில் தணிக்கை தகவல் மேலாண்மை முகைமை திட்டத்தினை செயலாக்க அரசாணை (நிலை) எண்.291, நிதி(கூட்டுறவுதணிக்கை)த்துறை, நாள்.03.11.2015 மற்றும் அரசுக் கடிதம் எண் .29167/நிதி (கூ.த)/ 2016, நாள். 26.08.2016 வழி **ரூ.2.00** கோடி நிதி அரசால் அனுமதிக்கப்பட்டது. அதில் மென்பொருள் மேம்பாடு மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக **ரூ.61,27,973/-** செலவிடப்பட்டது.

இருதுறைகளுக்கும் முறையே 242 மடிக்கணிணிகள் வீதம் 484 மடிக்கணினிகள் கூட்டுறவுதணிக்கைத்துறை மற்றும் உள்ளாட்சிநிதி தணிக்கைத்துறைக்காக ELCOT வழியாக **ரூ.1.20** கோடி செலவில் வாங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று ( 16.04.2018) நந்தனத்தில் உள்ள ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலக வளாகத்தில் 16 ஓய்வூதியர்களுக்கு அடையாள அட்டை வழங்கியும் மற்றும் 70 தணிக்கையாளர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கியும் இத்திட்டங்களை துவக்கிவைத்துள்ளார்கள்.

இவ்விழாவில் அரசின் கூடுதல் தலைமைசெயலர் (நிதித்துறை) திரு. க. சண்முகம், இ.ஆ.ப, முதன்மைசெயலர் மற்றும் கருவூல கணக்குதுறை ஆணையர் திரு. தென்காசி சு ஜவஹர் இ.ஆ.ப, இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை திரு.பூ.மோகன், இயக்குநர் கூட்டுறவு தணிக்கைத்துறை திரு.து.ஸ்ரீதர் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**